விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

[ஆண்டு]ர் 24 வைகாசி 18 ஷபா 8 இதழ் 108

[யாழ்]ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1 6 –82

## நெல்லியடிசந்தியில்நிகழ்ந்த திடீர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(நமது நிருபர் எம் சுபேந்திரன்)

''இந்தியாவில் கைதானவிடுதலைப்போராளிகளை இலங்கை அரசிடம் ஒப்படைக்காதீர்'' என்று கோஷித்தபடி சுமார் 0 இளைஞர்கள் நேற்றுக் காலை நெல்லியடியில் திடீர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய போது பெரும் பரபரப்பு ஏற்பட்டது!

இந்த ஊர்வலத்தைப்பெருந் திரளான மக்கள் வீதி ஓரங்களிலும் வீடுகளிலும் நின்று பார்வையிட்டனர். நெல்லியடி சந்தையில் நேற்றுக்காலை சரியாக 10–40 மணியளவில் நான்கு திசைகளிலிருந்தும் சுமார் 50 இளைஞர்கள் கூடினர்கள். பின்பு சந்தியில் அணிவகுத்து ப. நோ. கூ. சங்க எரிபொருள் விற்பனை நிலையம் வரை கோஷித்தபடி ஊர்வலமாகச்சென்றனர்.

பஸ்களிலும், மினிபஸ்களிலும் சென்றவர்கள் வாகனங்களை மறித்து ஊர்வலத்தைப் பார்வையிட்டனர்.

''பேச்சுவார்த்தை வேண்டாம், போராட்டமே விடுதலைக்குவழி'' என்று தலைமை தாங்கிச் சென்ற இளைஞர் கோஷமிட்டார். அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் கோஷமிட்டனர். ''தமிழ் ஈழம் அமைப்போம் தமிழினத்தின் ஒற்றுமையைக் காப்போம் என்றும் கோஷமிட்ட இளைஞர்கள் திரும்பவும் நெல்லியடிச் சந்தியை வந்தடைந்து கலைந்து சென்றனர். (க)

## ★தமிழ்நாடு பொலிஸாரிடமிருந்து

# எதிர்பார்த்த ஒத்துழைப்பு கிடைக்கவில்லை!

### செய்தியாளர் மாநாட்டில் ஐ. ஜி. பி. 'ருத்ரா' தகவல்

(கொழும்பு)

சென்னையில் கைது செய்யப்பட்ட இலங்கை தீவிரவாத இளைஞர்கள் சம்பந்தமாக தமிழ் நாடு பொலிஸாரிடமிருந்து எதிர்பார்த்த ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்று பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் நேற்றுதெரிவித்தார்.

பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்படி கருத்தை அவர் வெளியிட்டார்.

''புதுடில்லி சென்றபோது இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகளிடமிருந்து போதுமான ஒத்துழைப்புக் கிடைத்தது. இதேமாதிரிநான் சென்னைக்கு வந்த உடன் ஓரளவு ஒத்துழைப்பு கிடைத்தது. பின்னர் தமிழ் நாடு பொலிசாரிடமிருந்து எதிர் பார்த்த ஒத்துழைப்ப கிடைக்கவில்லை'' என்று தெரிவித்த பொலிஸ் மா அதிபர்;

''இப்பொழுது தமிழ் நாட்டில் விசாரணை நடைபெறுகிறது. விசாரணைகளில் தலையிட நாம் விரும்பவில்லை. விசாரணையின் பின்னர் அரசு மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்'' என்றார்.

பொலிஸ் மா அதிபர் தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் இன்று கையளிப்பார். (மா)

## முடிவுகள்

அரியாலை சனசமூக நிலைய காசிபபிள்ளை அரங்கில் நேற்று மாலை அதிஷ்டம் பார்க்கப்பட்ட 127 வது இலக்க மகாஜன சம்பத முடிவுகள் வருமாறு.

முதலாம் பரிசு

15 Y 0499

ரூபா 1,97,925.00

இரண்டாம் பரிசு

05 D 0284

ரூபா 1,18,755.00

மூன்றும் பரிசு

26 A 0325

ரூபா 39,585.00

(8-ம் பக்கம்பார்க்க)

## நீதிமன்றத்தில் விமலராஜா ஆஜர்செய்யப்பட்டார்

(கொழும்பு)

பனாகொடைஇராணுவமுகாமில்காவலில்வைக்கப்பட்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவன் அ. விமலராஜா மற்றும் ஏழு இளைஞர்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது இவர்களை இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை வைத்தியபரிசோதனைக் குட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதியரசர்

(8ம் பக்கம் பார்க்க)

சுதுமலை செந்தூர் வடிவேலு மரணம்:

## சந்தேக நபருக்கு தொடர்ந்து றிமாண்ட்

[யாழ்ப்பாணம்]

சுதுமலை மேற்கைச் சேர்ந்த முத்துவேலு செந்தூர்வடிவேலு (31 வயது) மரணம் தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள ஆயுர்வேத வைத்தியர் கெங்காதரன் யாழ் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டபோது மீண்டும் இம்மாதம் [..]ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் ரி. ஜோகநாதன் உத்தரவிட்டார்.

82ம் ஆண்டுஆக்டோபர் 22ம் திகதி சுதுமலை அம்மன் கோவிலுக்கு முன்பாக உள்ள வயல் வெளியில் முத்துவேலு செந்தூர் வடிவேலு இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

இம்மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டுவந்த ஆயுர்வேத வைத்தியர் கெங்காதரன் யாழ். பொலிசில் 23ம் திகதி சரணடைந்ததைத் தொடர்ந்து, யாழ் நீதவானுல் கடந்த 31ம் திகதி வரை அவர் றிமாண்டில் வைக்கப்பட்டார்.

நேற்றுக்காலை இவர் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது, யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் சார்ஜன்ட் ஜி. மாசிலாமணி, சந்தேக நபர் மீதான விசா

(8ம் பக்கம் பார்க்க)

## ஒருவர் படுகொலை: 30 பேர் கைது

சென்னை, மே. 31

அரக்கோணத்தில், ஆதிதிராவிடர் ஒருவர் கோஷ்டியொன்றினல் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக 30 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொலையுண்ட ஆதிதிராவிடரை, அக்கோஷ்டியினர் எரித்துவிட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## பிரி. போர்க்கப்பலைத் தாக்க எடுத்த முயற்சி முறியடிப்பு!

லண்டன், மே. 31

போக்லண்ட்தீவுக்கு அப்பால் உள்ள பிரிட்டனின் 'இன்விசிபிள்' என்ற போர்க்கப்பலைச் சேதப்படுத்த ஆர்ஜென்டீன படைகள் எடுத்தமுயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் பாதுகாப்புஅமைச்சு அறிவித்துள்ளது.

பிரிட்டிஷ் போர்க்கப்பல் சேதப்படுத்தப்பட்டதாக ஆர்ஜென்டீன அறிவித்ததைத் தொடர்ந்தே பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு இவ்வாறு அறிவித்துள்ளது.

போக்லண்ட் தலைநகரான போர்ட்ஸ்ரான்லியின் விமான ஓடுபாதை பிரிட்டிஷ் விமானங்களின் குண்டு வீச்சுக்கு இலக்கானது.

பிரிட்டிஷ் படைகள் போர்ட்ஸ்ரான்லிக்கு 30 மைல் தொலைவில் நிலைகொண்டு முன்னேறி வருகிறது.

போக்லண்டில் குடிமக்கள் வாழும் இரு பகுதிகளை பிரிட்டிஷ் படைகள் மீண்டும் கைப்பற்றியுள்ளன.

பிரிட்டிஷ் நாசகாரி போர்க்கப்பலை தாக்கவந்த ஆர்ஜென்டீன விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது (க

## சோழவந்தான் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது!

சென்னை. மே. 31

சோழவந்தான் பொலிஸ் நிலையத்தை கோஷ்டியொன்று தாக்கி சேதம் விளைவித்தது தொடர்பாக 20 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராஜேந்திரன் நேற்று மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

விவசாயத்தலைவர் ஒருவர் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து பொலிஸ் நிலையம் முன்னிலையில் மறியலில் ஈடுபட்ட ஒரு கோஷ்டியினர் இறுதியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்க ஆரம்பித்ததாக கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தின் போது 20 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

### தடுப்புக்காவலிலுள்ள

## இளைஞரை விசாரணை அல்லது விடுதலை செய்யவேண்டும்''

### தமிழ் காங். கொழும்புகிளை தீர்மானம்

[கொழும்பு]

நீதி விசாரணைக்குட்படுத்தப் படாது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களைக் குற்றச்சாட்டுகளிருப்பின் உடனடியாக நீதிமன்றத்தின் முன் நிறுத்தும்படியும், இல்லையேல் உடனடியாக விடுதலை செய்யும்படியும் அரசைக் கோரும் தீர்மானம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கொழும்புக் கிளையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டத்தரணி திரு. எ. உ. தேவராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் சட்டத்தரணி கிறிஸ்துராஜா மேற்கண்ட தீர்மானத்தைக்கொண்டுவந்தார். அடுத்த கொழும்புக் கிளைக் கூட்டம் ஜூன் 30-ம் திகதி நடைபெறும் [க]

## இருவர் பலி

சென்னை, மே. 31

நுங்கம்பாக்கத்தில் சாராயகுதம் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் இருவர் கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

# வரி விளம்பரம்

## பயிற்சி

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங் டிப்பிளோமா பயிற்சி, ஒரு மாத வெல்டிங் டிப்பிளோமா பயிற்சி 02-06-82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னெலொஜி, 9 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3344

## தேவை

ஆங்கில மருந்து வகைகள் விநியோகிக்கும் ஸ்தாபனம் ஒன்றுக்கு பங்காளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3398, C/O ஈழநாடு யாழ்ப்பாணம். 3398

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு 4 தாதிமார் தேவை. விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்க. விளம்பரஇல: 3401 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 3401

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற Honda C/90 C. D. 125 ருவின் செல்வ் ஸ்ராட்டர் மோட்டார் சைக்கிள்களும் L-D வானுக்குரிய டீசல் எஞ்ஜினும் விற்பனைக்கு உண்டு. நா.சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3382

யாழ். இந்து மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரி, ஆகியவற்றிற்கு அண்மையில் பிறவுண் வீதி இரண்டாவது ஒழுங்கையில் வீடுகட்டுவதற்கேற்ற காணித்துண்டு விற்பனைக்குண்டு. அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மக்கள் பிரசுராலயம் லிமிட்டெட், 40, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 3375

முதலிலேயே ஆக்கப்பட்ட பூற்றுன கட்டளையின்

### அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்
காலஞ்சென்ற தும்பளை வல்லிபுரம் கந்தையாவின் மரணசாதனவிடயமாய்:-
கதிரவேற்பிள்ளை சண்முகராசா, தும்பளை, பருத்தித்துறை.

மனுதார்

மரணசாதன ] இல.1131
நியாயாதிக்கம் ]

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1981 கார்த்திகை மாதம் 18ந் திகதியன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1982 சித்திரை 30ந் திகதி
நீதிமன்றின் கட்டளைப்படி
கே. செல்வராசா
பதிவாளர்
என்னுல் தயாரிக்கப்பட்டது
மனுதாரின் சட்டத்தரணி
3390

## விற்பனைக்கு

பாவித்துக் கழித்த 45 கலன் வெற்று பரல்கள் விற்பனைக்குண்டு. மில்க் வைற். யாழ்ப்பாணம். 3399

கைதடி நுணுவில் வயிரவர் கோவிலடியில் 5 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இளையதம்பி ஆசிரியர், கிராமோதய சபைத் தலைவர், கைதடி - நுணுவில் வயிரவர் கோவிலடி, செ. அரியரெத்தினம், 43, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 3384

குளிர்சாதனப்பெட்டி ஸ்ரீறியோ இசைத்தட்டு விளையாடி, கைக்கடிகாரங்கள், கமருக்கள் முதலிய பல பொருட்கள் விற்பனைக்குண்டு. பிராஜ்மல் என்ரப்பிறைசஸ், பொந்தி ஒழுங்கை, பண்டத்தரிப்பு. 3394

பின்னுறுதிக் கட்டளை பற்றிய

### அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றத்தில்
இளவாலை சிறுவிளானைச் சேர்ந்த வைத்திலிங்கம் சொக்கநாதன் என்பவரின் மரணசாதன மில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
வைத்திலிங்கம் சொக்கநாதன் கைம்பெண் அன்னலட்சுமி சிறுவிளான் இளவாலை

மனுதார்

மரணசாதன
நியாயாதிக்கம் இல. 133
எதிராக
1 அப்பாத்துரை வைரவமூர்த்தியும் பெண்
2. ஞானேஸ்வரியும்- சிறுவிளான் இளவாலை தற்போது 76, கிறுண்டிறைவ், லண்டன் எஸ். டபிள்யூ 20

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க அதில் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 9ம் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 21ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
என்னுல் எழுதப்பட்டது.
செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
3327

## விற்பனைக்கு

மல்லாகம் கோணற்புலத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. K. சுப்பிரமணியம், V. H. லேன், இருபாலை. 3397

அரியாலை கிழக்கு பூம்புகார் குடியேற்றத்திட்டத்திற்கு அருகில் பஸ்போக்குவரத்துடைய பாதையோரமாக நல்ல தண்ணீர் வசதியுடைய 25 பரப்பு நிலம் மொத்தமாக அல்லது மூன்று நான்கு பரப்பு துண்டுகளாக விற்பனைக்கு உண்டு. வீடு, கடைகள், பேக்கரி போன்றவை கட்டுவதற்கு ஏற்ற இடம், தொடர்பு கொள்க; பா. மாணிக்கராஜா, 67, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 3404

பின்னுறுதிக் கட்டளை பற்றிய

### அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்.

மரணசாதனமின்றி மரணமெய்திய, யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதி, 65ம் இலக்கத்தைச் சேர்ந்த வைரமுத்து இராசையா.

மரணமெய்தியவர்
இராசையா கைம்பெண் சாவித்திரி, இல: 65, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன
நியாயாதிக்கம் இல; T3643
எதிர்
1. ச. அபிமன்யுவும் பெண்
2. நகுலேஸ்வரியும்
3. வே. சிவரெத்தினமும் பெண்
4. சரோஜினிதேவியும் [பராயமடையாதவர்]
5. இராசையா இராஜேஸ்வரி, எல்லோரும் 65, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசானத்தை எண்பிப்பதற்காக/ மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ஆம் ஆண்டு ஆனி மாதம் 4-ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
தா. குலஞானம்,
பதிவாளர்.
மனுதாரின் சட்டத்தரணி,
த. சோமசுந்தரம்,
சட்டத்தரணியும்,
பிரசித்தநொத்தாரிசும்,
93/1, மானிப்பாய்வீதி,
யாழ்ப்பாணம்.
1982ம் ஆண்டு சித்திரை மாதம் 2ம் நாள்.
3195

## சித்திரத் தேர்

(கரவெட்டி)

அச்சுவேலி வடக்கு சித்திர வேலாயுதர் ஆலய சித்திரத் தேர் அச்சுவைக்கும் வைபவம் வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

## 7வது நினைவாஞ்சலி



தோற்றம்: 30-10-50
மறைவு: 7-11-81

ஏழு மாதங்கள் சென்றுலும் எம். அருமைச் செல்வன் பொன்னுத்துரை சர்வேஸ்வரன் (அரி) எம் உள்ளக்கோவிலில் குடிகொண்டிருக்கின்றுன் என்னும் நினைவோடு வாழும் தந்தை, தங்கை, மருமகன், மச்சான், பெரியம்மா, ஆசையம்மா, சின்னம்மா, மாமா, மாமி, சித்தப்பா, அக்கா, அண்ணு, தம்பி, தங்கை, மகன் மற்றும் உறவினரும் அவரது ஆத்மா சாந்தியடைய என்றும் வண்ணை விநாயகப் பெருமானை வேண்டுகின்றேம்.

இங்ஙனம்
தந்தையும் உற்ருரும்.
3402

## கோஷ்டி சண்டையில் 17 பேர் கைது

சென்னை மே 31

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிக்கால் கிராமத்தில் இடம் பெற்ற கோஷ்டிச் சண்டையில் இருவர் பலத்த காயத்துக்குள்ளாகினர் இவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் ஆவர். சந்தேகத்தின் பேரில் இதுவரை 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## கடும் வரட்சி

டாக்கா, மே 31

கடும் வரட்சி காரணமாக பங்களாதேஷின் தலைநகரான டாக்காவை அண்டியுள்ள விளைநிலங்களில் நெல், சணல் ஆகிய பயிர்கள் சேதமடைந்துள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

சுன்னுகம்
பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)
சுன்னுகம்

### விற்பனை

சுன்னுகம் பல. நோ. கூ. சங்கத்தில் 2000. கி. கி. க்கு மேற்பட்ட பாவிக்கப்பட்ட சிட்டைக்கடதாசி வகைகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 100/- சங்கத்தில் செலுத்திச் சங்கவேலை நாட்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

9-6-1982 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்
26-5-1982 3400

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

1. வைத்திலிங்கம் கைம்பெண் செல்லம்மா மூளாய், சுழிபுரம். —வழக்காளி

எதிராக

இல. ஈடு/2859
1. நா. பொன்னம்பலம்
2. பெண் சிவபாக்கியம்
3. ஆறுமுகம் கைம்பெண் பொன்னுப்பிள்ளை மூளாய், சுழிபுரம். —எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்குள் MB/2859ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுக விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1982ம் ஆண்டு யூன் மாதம் 7ம் திகதி (07-06-1982 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2640/-ம் 29-1-79 தொடக்கம் 21-09-1979 வரைக்கும் ரூபா 2000/-க்கு 24 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 505/25.

### ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை ''வட்டுக் கலட்டி'' பரப்பு நிலை இலாச்சம் நாலும் கொட்டிலும். எல்லைகள் கிழக்கு நாகர் கிருஷ்ணர் பெண் நீலாட்சிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை. தெற்கு கிருஷ்ணபிள்ளை பெண் இலட்சுமியின் ஆதனம். இந்த எல்லைப்படி இதடங்கலும்.

ஒப்பம்
கந்தர் சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.
3396

குறைந்த சலார்!! கூடிய பயன்!!
★ திருமணம் ★ பிறந்ததினம் ✶ திருமண நிச்சயார்த்தம் ✶ ருதுசாந்தி
மற்றும் பெருவிழாக்களை வர்ணக்கலரில் வாழ்நாள் முழுவதும் பார்த்து மகிழ சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கு
வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்
266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

# தலைநகருக்கு 30 மைல் தூரத்தில்

# பிரிட்டிஷ் 'வான்குடை' படை!

## 1,400 ஆர்ஜென்டீன வீரர்கள் கைது:

## இரு குடியேற்ற பிரதேசம் வீழ்ச்சி!

லண்டன் மே 31

பிரிட்டனின் இரு முனைத்தாக்குதலுக்கு ஈடு கொடுக்கமுடியாமல் ஆஜென்டீனு பின்வாங்கும்போது 1400 ஆர்ஜென்டீனிய படைவீரர்கள் போக்லண்ட்டின் தலைநகரான போட் ஸ்ராஸ்லியஸ் பிரிட்டிஷ் துருப்புகளால் கைதுசெய்யப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களில் ஆர்ஜென்டீனிய உயர் இராணுவ அதிகாரியும் அடங்குவர்.

சென்காளோஸில் முட்கம்பி வேலிகளுக்கு மத்தியில் இவர்களை பிரிட்டன் சிறைப்பிடித்து வைத்துள்ளது.

இத்தாக்குதலில் பிரிட்டனின் அதிரடிப்படையைச் சேர்ந்த 12 பேர் கொல்லப்பட்டதாகவும் 30 பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டதாகவும் திலெட், டக்ளஸ் ஆகிய குடியேற்றப் பிரதேசங்களை பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றியுள்ளதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு இன்று அறிவித்துள்ளது.

ஏற்கனவே பிரிட்டிஷ் படைகளிடம் வீழ்ச்சியடைந்த கூஸ்கிறீன், டார்வின் ஆகியகிழக்கு போக்லண்ட் துறைமுகங்களை பிரிட்டன் கைப்பற்றியுள்ளதை ஆர்ஜென்டீனு இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இருதுறைமுகநகங்களிலிருந்தும் ஆர்ஜென்டீனுவுக்கான தொடர்பு சாதனங்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன

பிரிட்டனிடம் போட்ஸ்ரான்லி வீழ்ச்சியடையாமல் தடுப்பதற்கும் எந்தவித தாக்குதல்களையும் மேற்கொள்ளக்கூடிய கைசெந்த 7000 படை வீரர்களை போட்ஸ்ரான்லியில் ஆர்ஜென்டீனு உஷா நிலையில் வைத்திருப்பதாக புவனர்ஸ் அயர்ஸில் இருந்து செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவரை 420 ஆர்ஜென்டீனு வீரர்கள் கொல்லப்பட்டதாக அறிய வருகிறது.

பிரிட்டனின் வான்குடைப் படையினர் (பாரசூட்) போட்ஸ்ரான்லியை அண்மிக்க இன்னும் 30 மைல்கள்தான் உள்ளன என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை வாஷிங்டன் சென்றிருந்த ஆர்ஜென்டீனு வெளிவிவகார அமைச்சர் திரு. கொஸ்தா மென்டிஸ் அவசரமாக ஆர்ஜென்டீனு திரும்பி ஜனுதிபதி ஹல்ரேறியுடன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். (கு)

அணிசேரா நாடுகளின் மாநாட்டில்

## பிரிட்டனை கண்டித்து லத்தீன் அமெரிக்கநாடுகள்தீர்மானம்?

ஹவானு மே, 31

புதன்கிழமை ஆரம்பமாகும் அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மகாநாட்டில் போக்லண்ட் பிரச்னை, வளைகுடா நாடுகளின் யுத்தம் ஆகியனபற்றி ஆராயப்படும்.

போக்லண்ட் தீவுப் பிரச்னையில் பிரிட்டன் கடைப்பிடிக்கும் போக்கைக் கண்டித்து லத்தீன், அமெரிக்க நாடுகள் தீர்மானம் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தீர்மானம் கொண்டுவரப்படுமானல் பலத்த எதிர்ப்புக் கிளம்பலாம் என இம்காநாட்டில் பங்குபற்றும் மண்டல சார்பற்ற சில நாடுகள் கருத்துத் தெரிவித்தன.

மண்டல சார்பற்ற நாடுகளின் தலைவர் என்ற முறையில் துயூபா ஜனுதிபதி திரு. பிடல்காஸ்ற்ரூே மகாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவார். இவரது பதவிக்காலம் எதிர்வரும் செப்டம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது. பின்பு ஈராக் ஜனுதிபதி பதவியைக் கையேற்பார். (கு)

### ஆலயகூரை விழுந்து ஒருவர் மரணம்

சென்னை, மே 31

வேலூரில் உள்ள ஆலயமொன்றின் கூரைவிழுந்ததால் ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமானுர். பலர் பலத்த காயத்துக்குள்ளாகினர். கடும் மழையே இவ்விபத்துக்குக் காரணமென விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. (கு)

### மாம்பழப் பொருட்காட்சி

சென்னை, மே 31

'மாம்பழப்' பொருட்காட்சி ஒன்று சென்னைராஜாஜி மண்டபத்தில் ஜுன் 12, 13ம் திகதிகளில் நடைபெறஉள்ளது,

தனிப்பட்டவர்கள் அரசாங்க இலாகாக்கள், பதிவுசெய்யப்பட்ட வியாபாரிகள் வீட்டுத் தோட்டக்காரர்கள் ஆகியோர்களுக்கு புறம்பான பகுதி இப்பொருட்காட்சியில் ஒதுக்கப்படும். பொருட்காடசி முடிவில் பரிசுகளும் வழங்கப்படும்

மலர், காய், கனி, விதை, ஆகியவைகொண்ட பொருட்காட்சிஒன்று கோயம்புத்தூரில் நடைபெறவும் உள்ளது. (கு)

### வரட்சி 90பேர் பலி

புதுடில்லி மே 31

உத்தரப்பிரதேசத்தில் கடும் வரட்சியால் 90 பேர்வரை இறந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கு)

டென்னிஸ் வீரர்கள ன:

## அமிர்தராஜ் சகோதரர்கள் இலங்கை வந்துள்ளனர்

(கொழும்பு)

உலகின் தலைசிறந்த டென்னிஸ் ஆட்டக்காரர்களில் ஒருவரான தென்னிந்தியாவைச் சேர்ந்த திரு. விஜய் அமிர்தராஜ் தமது சகோதரர்களான அசோக், ஆனந் ஆகியோருடன் இலங்கை வந்துள்ளார்.

ஹோட்டல் லங்கா ஒபரேயில் தங்கி நிற்கும் திரு. அமிர்தராஜும், அவரது சகோதரர்களும் இலங்கையின் "டென்னிஸ்" ஆட்டக்காரர்களுடனும், டென்னிஸ் விளையாட்டுக் கழகங்களுடனும் மோதவிருக்கின்றனர். திரு. அமிர்தராஜின் சகோதரர்களான அசோக், ஆனந் ஆகியோரும் சிறந்த டென்னிஸ் ஆட்டக்காரர்களென்பது குறிப்பிடத்தக்கது.

திரு விஜய் அமிர்தராஜ் இலங்கையைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர் ஒருவரின் மகளையே விவாகஞ் செய்யவிருக்கின்ருர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமது எதிர்காலமனைவியைச் சந்திக்க இருமாதங்களுக்கு முன்னரும் இவர் இலங்கை வந்து சென்றிருந்தார். (கி)

## நிரஞ்சன் வழக்கறிஞரை சந்தித்தார்

(சென்னை)

நிரஞ்சன் என்று அழைக்கப்படும் சிவனேஸ்வரன் நேற்று முன்தினம் எழும்பூர் நீதிமன்றத்தில் வைத்து தமக்காக ஆஜரான வழக்கறிஞரைச் சந்தித்துப்பேச அனுமதிக்கப்பட்டார்.

எழும்பூர் நீதிமன்றத்தில் நிரஞ்சன் மீதான விசாரணை நடைபெற்றுக்கொண்டிருந்தபோது உமது சட்டத்தரணியுடன் பேசவிரும்புகிறீரா என்று நிரஞ்சனை நீதிபதி கேட்டபோதுஅவர் சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து நிரஞ்சன் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணனை தனிமையில் சந்தித்து பேசினுர்.

### மோதிரமும் சங்கிலியும் பொலிசாரிடம்

இச்சந்திப்பை அடுத்து நிரஞ்சனின் சங்கிலியையும், மோதிரத்தையும் பொலிசார் கைப்பற்றிவிட்டனர் என அவர் தமக்குக் கூறியதாக வழக்கறிஞர் ராதா கிருஷ்ணன் நீதிபதியிடம் தெரிவித்து அவற்றை சிறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சங்கிலியையும். மோதிரத்தையும் சிறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். (ம-இ)

## மகாபலிபுரத்தில் சுற்றுலாவிடுதி

சென்னை மே, 31

மகாபலிபுரத்தில் சுற்றுலா விடுதி யொன்றை மத்திய சுற்றுலா உதவி அமைச்சர் திரு. சர்மா நேற்று திறந்து வைத்தார்.

பொருட்காட்சி மண்டபத்துக்கான அத்திவாரக்கல்லை தமிழ் நாடு முதல் அமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் நாட்டினுர். (கு)

## வை. எம்.ஸி.ஏ. பேச்சுப் போட்டி

(அரியாலை)

யாழ்ப்பாணம் வை.எம்.ஸி.ஏ.யின் ஆதரவில் "சேக்ஸ்பியர்" பற்றிய பேச்சுப்போட்டியும், தனியாள் கலந்துகொள்ளும் நாடகப்போட்டியும் நடைபெறவிருக்கிறது.

யாழ். வை. எம். ஸி. ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில் 14 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்டவர்களான ஆண்களும் பெண்களும் கலந்துசொள்ளலாம்.

போட்டிக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாள் ஆனி 15ம் திகதி என்றும், அரையிறுதிப் போட்டி ஆடி மாதம் 5ம் திகதியும், இறுதிப்போட்டி ஆடி 10ம் திகதியும் நடைபெறுமென்றும் நிர்வாகச்செயலாளர் திரு பீற்றர் பி. சதாசிவன் குறிப்பிட்டுள்ளார். [அ]

## பாடசாலை சென்ற சிறுவன் வானுக்குப் பலி

[கிளிநொச்சி]

பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த சிறுவன் ஒருவன் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டுவந்த வானுக்குப் பலியானுர்.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த பரமர் தேவராசா (வயது 9) என்ற சிறுவனே பலியானவராவார்.

உருத்திரபுரம் பத்திமா பாடசாலைக்கு இச்சிறுவன் சென்று கொண்டிருந்ததாகவும் அப்பொழுது கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த தட்டிவான் மோதி மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை நடாத்திய கிளிநொச்சி பதில் நீதவான் எஸ். சுந்தரலிங்கம் விபத்து மரணமென த்தீர்ப்பளித்து வான் சாரதி வி. திருச்செல்வத்தையும், கிளீனர் பி. தயாபரமூர்த்தியையும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

கிளிநொச்சிப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர். (மா)

## லண்டன் 'வெம்பிளி' அரங்கில் பாப்பரசருக்கு வரவேற்பு

### குண்டுகள் துளைக்காத வாகனத்தில் பவனி

லண்டன் மே. 31

லண்டனில் ஆறு நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பரிசுத்த பாப்பரசருக்கு, லண்டனின் பிரசித்திபெற்ற வெம்பிளி அரங்கில் பிரமாண்டமான வரவேற்பு வழங்கப்பட்டது.

வெம்பிளி மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த வழிபாட்டு வைபவம் ஒன்றில் கலந்து கொள்ளும்பொருட்டே பாப்பரசர் அங்கு வருகை தந்திருந்தார். பல லட்சக் கணக்கில் இங்கிலாந்து மக்கள் வெம்பிளி அரங்கில் குழுமியிருந்து பாப்பரசரினதும், இங்கிலாந்தினதும் கொடிகளை அசைத்து ஆரவாரஞ் செய்தனர்.

பாப்பரசர் வழிபாட்டு மண்டபத்தையடையும் வரை விசேடமாக ஒழுங்குசெய்தஜீப் வண்டியொன்றில் ஏற்றிச்செல்லப்பட்டார். பாப்பரசர் சென்ற ஜீப் வண்டி அவருக்கென்றே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டதொன்று. இவ்வண்டியில் பாப்பரசர் நிற்கும் பகுதி துப்பாக்கி ரவைகளோ, வெடி குண்டுகளோ, துளைக்காத விதத்தில் விசேட கண்ணுடிகளால், அவரது உருவத்தை மட்டுமே பார்க்ககூடிய வகையில் மூடி அமைக்கப்பட்டிருக்கின்றது.

பாப்பரசர்மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிகள் எதிர்காலத்திலும் இடம் பெருதவண்ணமே பிரஸ்தாப

(6ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

கொன்றன்ன இன்ன செயினும் அவர் செய்த
ஒன்று நன்று உள்ளக் கெடும்.

—திருக்குறள்.

# நமது நோக்கு

## 'அன்றே மறப்பது நன்று'

தனிமனிதன் வாழ்விலும் சமூக வாழ்விலும் சில கட்டங்களில் மறக்கும் சக்தி மிகவும் வேண்டப்படுகிறது.

கடந்த வருடம் இதே மாதம் முதலாம் தேதி யாழ்ப்பாணம் கண்ட அழிவுசரித்திரம் முன்னென்றும் காணுதது. போர்த்துக்கேயர் காலத்தில் கோவில்கள் இடிக்கப்பட்டதும் எரிக்கப்பட்டதும் நாம் குறிப்பிடும் வரலாற்றில் சேர்க்கப்படவில்லை. அது அந்நிய ஆட்சி.

சுதந்திர இலங்கையில் யாழ்ப்பாணம் கண்ட துன் பச்சம்பவங்களில் பொது ஜன நூல்நிலையம் தீக்கிரையானது இன்று வரைக்கும் பிராயச்சித்தம் செய்து முடிக்காத பாதகச் செயலாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஒரே ஒரு தமிழ் தினசரி பிரசுராலயம் இன்ஞெரு அறிவுக் களஞ்சியம். அறிவின் பொக்கிஷமான நூல்நிலையத்துக்கு தீயிட்டவர்கள் இதனை விடுவார்களா? என்பதே பொது மக்களின் ஆச்சரியமற்ற கேள்வி.

வீடுகள், கடைகள் நெருப்புக்கிரையானதும், உயிர்கள் சில பலியானதும் பல அரைகுறையில் தப்பியதும் ஏழைகளின் கண்ணீரில் எழுதப்படவேண்டிய சோகக் கதை.

காரணமற்ற கொடிய செயல்கள் இவை. எவருக்கும் நன்றல்லவை; இவற்றை மறக்காமல் வருடா வருடம் நினைவு படுத்துவதில் எமக்கென்ன நன்மையென்று வாசகர்கள் கண்டனக்குரல் எழுப்புவது நியாயம்.

இதுபற்றி தமிழ் முனிவரின கட்டளையை நினைவூட்டி விட்டாலேபோதும்.

''நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பதுநன்று'

என்ற வாக்கியத்தின் தொனியைக் கவனித்தால் நன்றல்லதை மறப்பதற்கு முனிவர் அதிக காலம் கொடுக்கவில்லை. அன்றே என்று சொன்ஞர்,

யாருக்கு நன்று? தீக்குப்பறி கொடுதத இப் பகுதி மக்களுக்கே நன்று என்பது சொல்லாமல் விளங்கும்.

தனிமனிதனுக்குரிய உபதேசம் சமுகத்துக்கும் நாட்டுக்கும் பொருத்தமானதே!

முனிவர்களின் மகா வாக்கியங்கள் இலகுவில் தொழிற்படுமா?

யாழ்ப்பாணக் கல்வி, பண்பாட்டுவிருத்தி ஒரு வருடம் 'தொப்'பென்று நின்றுவிட்டது. மக்களின் விசனநிலை மோசமடைகின்றது. இன்று நாடெங்கும் 'புலிகளின்' வேட்டைக் கதை; யாழ்ப்பாணத்தைத் தவிர வேறெங்கும் 'சிங்கங்களின்' வேட்டைக் கதை பொய்யாய், கனவாய் பழங்கதையாய் மெல்ல மெல்ல மறக்கப் பட்டு விடுகிறது.

பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்து மக்கள் இந்த அநியாய அழிவை மறக்க முடியுமானுல் அவர்கள் தெய்வீக மனிதர்கள்! ஆன்பத்தை இழைத்தவர் தம்முடைய தீயசெயல்களுக்கு பாப விமோசனம் கோரவில்லையென்ருல் தர்மம் எங்கே) அரசையே நாம் இவ்வாறு கேட்கின்ருேம்.

உயிரிழந்த மக்களை மீட்க முடியாது. பொருட்சேதத்துக்கு நஷ்டஈடு வழங்கும் தீர்மானம் [யோசனை?] குளிர்சாதனப் பெட்டியில் பூட்டப்பட்டுவிட்டதா? நெருப்பைத் தணிக்கும் சாதனமல்லவா அது?

நிலைமை எவ்வாறு மோசமுடையதானுலும் தமிழ் மக்களின் வாழ்க்கைக்குறிக்கோள் எவ்வகையிலும மாசுபடுவதை நாம் ஆதரிக்க முடியாது.

எவரும் எச்சாதியினரும் எமக்கு மரணத்தைப்போல் பொறுக்கமுடியாத தீமை செய்தால் அதனுல் பெருந்துக்சம் உண்டாகிறது. ஆனுல் எந்தப்பகைவனும் முன்னே, பின்னே நண்பனுக மாறக்கூடும், அல்லது ஏதேன் ஒரு நன்மை செய்யக்கூடும் என்ற உயர்ந்த நோக்குடன் அதனை மறக்க பொறுமையை வளர்த்துக் கொள்வது நலம். சாப விமோசனத்துக்கு அதுவே வழி.

''சொல்வது யார்க்கும் எளிது அரியவாம் சொல்லிய வண்ணஞ் செயல்'' என்பதையும் நாம் மறக்கவில்லை.

# தேசிய நல்லுறவுக்கான சிந்தனையை வளர்த்த 'றேட்டரி' பயிற்சி முகாம்

நமது மாவிட்டபுரம் நிருபர்
ஞா. இராமநாதன்

றேட்டரிக் கழகங்களின் ஆதரவில் வளலாய் பிஷப் இல்லத்தில் இடம்பெற்ற 3 நாள் பயிற்சி முகாம் சிங்கள-தமிழ் இளைஞர்களிடையே தேசிய நல்லுறவுக்கான சிந்தனையை வளர்த்திருக்கிறது என்று கூறிஞல் அது மிகையாகாது.

யாழப்பாணம் றேட்டறிக் கழகமும், கிளிநொச்சி-பரந்தன் றேட்டறிக்கழகமும் இணைந்து இப்பயிற்சிமுகாமை ஏற்பாடு செய்திருந்தன.

தேசிய ஐக்கியம். இனங்களுக்கிடையிலான நல்லுறவு ஆகிய உயர்ந்தநோக்கங்களின் அடிப்படையில் இடம்பெற்ற இம்முகாமில் கொழும்பு, திருமலை, மாத்தளை, பதுளை ஆகிய இடங்களிலிருந்து சிங்கள இளைஞர்கள் வந்திருந்தனர். வடபகுதியில் மகாஜனக் கல்லூரி, சென். ஜோன்ஸ்கல்லூரி ஆகியவற்றிலிருந்து தமிழ் இளைஞர்கள் வந்திருந்தனர்.

தேசிய நல்லுறவிற்கான 3 வழிமுறைகள்பற்றி இம்முகாமில் முக்கியமாக ஆராயப்பட்டது.

சகலருக்கும் பொதுவான அம்சமாக விளங்குப் விளையாட்டுத்துறை மூலம் நல்லுறவை வளர்ப்பது குறித்து வடபகுதி பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. ஏ. நவரத்தினம் உரையாற்றிஞர்.

விளையாட்டுத்துறையில் ஈடுபடும்போது வேறுபாடுகளை மறந்து சகலரும் சகோதரர் என்ற முறையில் ஈடுபடுவதால் இன ஐக்கியம் வளரமுடியும் என்று அவர் கூறிஞர்.

இரண்டாவதாக சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்குமிடையிலான பொதுக்கொண்டாட்ட தினங்களை இரு பகுதியும் இணைந்து கொண்டாடி இரு பகுதியினரிடையேயும் புரிந்துணர்வு ஏற்படவழிவகுக்கலாம் என்ற கருத்து ஆராயப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் சிங்கள - தமிழ் கொண்டாட்ட தினங்களுக்களுக்கிடையிலான ஒற்றுமைகளை எடுத்துக் கூறி அவற்றை இரு இன மக்களும் ஒன்ருக இணைந்து எவ்வாறு கொண்டாட முடியும் என்பதையும் சுட்டிக்காட்டிஞர்.

மூன்ருவதாக அபிவிருத்தி பற்றி ஆராயப்பட்டது. ஒவ்வொரு மாவட்டங்களையும் சிறப்பாக அபிவிருத்திசெய்து அங்குள்ள இளைஞர்களது தேவைகளை பூர்த்திசெய்து இளைஞர்களது பொருளாதார வளத்தை பெருக்குவதன் மூலம அவர்களது மனதில் தீய எண்ணங்கள் வளராமல் தடுக்கமுடியும் என்பதுபற்றி ஆராயப்பட்டது.

யாழ். பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன் இதுபற்றி உரையாற்றி மாவட்ட அபிவிருத்தியின் அவசியத்தை வலியுறுத்திஞர்.

மேலும் பலவிடயங்கள்ஆராயப்பட்டதுடன் சிங்கள-தமிழ் இளைஞர்கள் இணைந்து கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், சிரமதானம் போன்றவற்றிலும் ஈடுபட்டனர்.

இதுவரை காலமும் தென் பகுதியிலேயே நடைபெற்ற இப்பயிற்சி முகாம் இந்தமுறை தான் யாழ்ப்பாணத்திலே முதல் தடவையாக நடைபெற்றபோதிலும் இதுகுறிப்பிடத்தக்க பயனை அளித்துள்ளது எனலாம்.

முகாமின் இறுதியில் இளைஞர்களை 4 குழுக்களாகப் பிரித்துத் தாம் பெற்ற பயிற்சி குறித்து கணிப்பீடுசெய்யுமாறு பணிக்கப்பட்டது. அதிலே சிறப்பாகசெய்த குழுவுக்கு யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளையின்பிரதிநிதியாக கலந்துகொண்ட வண. மைக்கேல்சாமி பரிசில்கள் வழங்கிஞர்.

தென்பகுதியிலிருந்து வந்த சிங்கள இளைஞர்கள் யாவரும் வெவ்வேறு இடங்களிலிருந்து வந்தவர்கள் அவர்கள் அங்கு சென்று இம்முகாமில் பெற்ற அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதன் மூலம் தப்பான எண்ணங்கள் நீங்க வழி பிறக்கும்'' என்று இம்முகாமின் பொறுப்பாளராக இருந்த றேட்டரியன் திரு. ஆர். இராஜலிங்கம் கூறிஞர்.

முகாமின் ஆரம்பத்தில் மூன்று கொடிகள் ஏற்றப்பட்டன. தேசியக்கொடி, நந்திக் கொடி றேட்டரிக்கழகக்கொடி ஆகிய மூன்றும் ஏற்றப்பட்டது தேசிய ஐக்கியத்தையே குறிக்குமென திரு. இராஜ லிங்கம் தெரிவித்தார்.

# சபாஷ் விஜயலக்ஷமன்!
## சிறந்த வடமாகாண பாடசாலை கிரிக்கெட் வீரராகத் தெரிவு

(கொழும்பு

யாழ்ப்பாணம இந்துக் கல்லூரியின் கிரிக்கெட் வீரரான செல்வன் மார்க்கண்டு விஜயலக்ஷமன் இவ்வாண்டின் சிறந்த வடமாகாண பாடசாலை கிரிக்கெட் வீரராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரபல நிறுவனங்களான பாட்டா-ஒப்ஸோவர் ஆகியன இணைந்து இலங்கைப் பாடசாலைகளிடையே சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்களைத் தெரிவுசெய்தபோதே செல்வன் விஜய லக்ஷமன் இரண்டாவது தடவையாகச் சிறந்த வடமாகாணப் பாடசாலை கிரிக்கெட் வீரராகத் தெரிவாகியுள்ளார்.

கடந்த ஆண்டு இவரே வடமாகாணத்துக்கான பாடசாலை கிரிக்கெட் வீரராகத் தெரிவாஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வன் விஜயலக்ஷமனை யாழ்ப்பாணம் கிரிக்கெட் நடுவர்கள் சங்கமே சிறந்த வடமாகாண வீரராகப் பாட்டா-ஒப்ஸோவர் நிறுவனங்களின் மேற்படி தெரிவுக்கு சிபார்சு செய்திருந்தது.

யாழ். இந்துக்கல்லூரி கிரிக்கெட்கோஷ்டியில் விக்கட்காப்பாளராக அங்கம் வகிக்கும் செல்வன் விஜயலக்ஷமன் இவ்வருட கிரிக்கட் பருவத்தில் எட்டுப் போட்டிகளில் 569 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவரது ஆகக்கூடிய ஓட்டங்கள் 148 ஆகும். ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்தே இவர் இத்தொகையைப் பெற்ருர்.

செல்வன் விஜயலக்ஷமன், யாழ். இந்துக்கல்லூரியில் ஜி. ஸி. ஈ. உயர்தரம் வகுப்பில் (விஞ்ஞானப்) கல்வி பயில்கிருர். எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சைக்குத் தோற்றுகிருர்.

பாட்டா-ஒவ்ஸோவரின் சிறந்த வடமாகாண பாடசாலைக் கிரிக்கெட் தேர்வில் இரண்டாவதாக யாழ். மத்திய கல்லூரி வீரர் செல்வன் கே. தோமஸ் தெரிவாகியுள்ளார். சிறந்தபந்துவீச்சாளரானஇவர் இவ்வருட கிரிக்கெட் போட்டிகளில் 90 விக்கட்டுகளைப் பெற்றிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

சிறந்த பாடசாலைக் கோஷ்டியாக யாழ் மத்திய கல்லூரி தெரிவு செய்யப்பட்டிருக்கிறது இத்தெரிவில் யாழ். பரியோவான் கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட இத்தேர்வில் தெரிவான வீரர்களுக்கு இம் மாதம் 16ந் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பரிசில்கள் வழங்கப்படும்.

இப்பரிசளிப்பு விழாவில் பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசாவும், திருமதி பிரேமதாசாவும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வர். (க)

# "குட்டிக் காந்தி"

இலங்கை சர்வோதய இயக்கத்தலைவர் டாக்டர் ஏ. ரீ. ஆரியரத்தின தமது தொண்டின் பரிசாக இன்ஞெருபெரும் தொகைப் பணத்தைப் பெற விருக்கிருர்.

1969-ல் பிலிப்பைன்ஸ் நாடு அதன் புகழ்பெற்ற ''ராமன் மாக்ஸேஸே'' விருதை அவருக்கு வழங்கியிருந்தது. அவர் அப் பெருந்தொகைப் பணத்தை தமது சர்வோதய இயக்கத்துக்கே அர்ப்பணித்துவிட்டார்.

இன்று அவருக்குக் கிடைத்த சர்வதேச புகழ் பெற்ற பெல்ஜியம் விருது, சர்வதேச அபிவிருத்தியின் பெயரால் வழங்கப்படும். பதினைன்கு லட்சம் ரூபாய் பெல்ஜியம் மன்னர் கையிலிருந்து இதனை வருகிற நவம்பர் மாதம் 24-ம் தேதி அவர் பெறுவாரென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மூன்ரும் உலகநாடுகளின் அபிவிருத்தியில் முதன்மை பெற்ற தலைவர் ஒருவருக்கு இது வழங்கப்படுவதானுல் இலங்கையின் கௌரவம் எந்த உச்சத்திலென்பது கற்பனைக்குரியது. இருந்தும் தன்வீட்டு முல்லை மணக்காது என்பதை நாம் உணர முடிகிறது. கொழும்பு ஆனந்தாக்கல்லூரியில் சாதாரண ஆசிரியராகப் பணிவுடன் பணியாற்றிய இச் 'சின்ன' மனிதன் இன்று உலகிலே பெரியவராகக் கௌரவிக்கப்படுவது நாட்டுக்கும் மக்களுக்கும் பெருங் கீர்த்தியை அளிக்கின்றது.

இந்தப் பெருமைக்குரித்தான இப்பெருமகனின் வாழ்வு என்றும் ஒரு இன்ப வாழ்வாக அமையவில்லை; எத்தனை இடர்கள், இழ்ச்சிகள், கிண்டல்கள், பொருமை, குரோதம் மத்தியில் மிகப்பணிவுடனும் காந்திய பொறுமையுடனும் சேவை செய்கின்ற சர்வோதயத் தலைவர் நாட்டில் 6000 கிராமங்களைப் புனரமைப்பதில் ஈடுபட்டுள்ளார். அவற்றுள் 4000 கிராமங்கள் நவீன வசதிகளுடன் வாழுமளவிற்கு தன்னிறைவுத்திட்டம் துரிதப்படுத்தப்படுகிறது.

நாட்டின் பண்பு கிராமங்களில் காணப்படவேண்டுமென்ற பெரு நோக்குடன் உழைக்கும் தலைவர் ஆரியரத்ன மகாத்மாகாந்தி, வினேபா, ஜெயபிரகாஷ்நாராயண் போன்ற பெரியார்களிடம் போதிய பயிற்சி பெற்ற பெருவீரன்.

சாதாரண குடும்ப வாழ்வு வாழும் சர்வோதய வீரர் சர்வோதய கோட்பாட்டால் நாட்டில் இன ஒற்றுமை வளர்க்க முடியுமென்ற நம்பிக்கை கொண்ட நல்லாத்மா.

யாழ்ப்பாணத்துக்கு நல்ல சேவை செய்து வந்த இப்பெரியாரும் அவருடைய குழுவும் இன்று நிலவும் வேற்றுமை உணர்வால் அடிக்கடி வரும் வழக்கத்தை குறைத்து விட்டமை இப்பகுதி மக்களின் துரதிர்ஷ்டமாகும்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடந்த கலவரக் காட்சிகளை பார்வையிட்ட டாக்டர் ஆரியரத்ன பொது ஜன நூல்நிலையத்துக்கு நிதிஉதவியது எமது நினைவுக்கு வருகிறது.

அறிஞர் ஷாவின் படுக்கையறையில் ஒரே ஒரு படம் தூங்குவது வழக்கமாம். அது மகாத்மாகாந்தியின் படம். அதனைக் குறிப்பிடும் அவருடைய நண்பர்களுக்கு ஷா செய்யும் கிண்டல், ''அவர் நமது அண்ணர்; நான் அவருடையதம்பி — மகாத்மா சீனியர் அவர், நான் மகாத்மா யூனியர்'' என்பாராம்.

சர்வோதயத்தொண்டன் ஆரியரத்னவை நாம் ''குட்டிக் காந்தி'' என்று அழைத்து நாடு அவருடைய பயிற்சியால் இன்னும் பல தொண்டர்களை உருவாக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்ருேம்.

# துப்பாக்கிமுனையில் ரூ.60,000கொள்ளை

(மாவிட்டபுரம்)

துப்பாக்கி சகிதம் முகமூடிக் கொள்ளையர்கள் விடொன்றினுள் புகுந்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, பணம், சேலைகள் போன்றவற்றைக் கொள்ளையடித்துள்ளனர்.

வட்டுக்கோட்டையில் செல்வி மேரி எலியாஸ் என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது.

இரவு 9 மணியளவில் இவரது வீட்டுக்கு வந்த 5 இளைஞர்களில் இருவர் துப்பாக்கி வைத்திருந்ததாகவும், ஐவரும் முகமூடி அணிந்திருந்ததாகவும், துப்பாக்கியைக் காட்டி வீட்டிலிருந்தவர்களைப் பயமுறுத்திய அவர்கள் துப்பாக்கிமுனையில் வீட்டுக்காரரை பணயம்வைத்து வீட்டிலிருந்த சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, பணம், சேலைகள் உட்பட மற்றும் பொருட்களைக் கொள்ளையடித்துச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து காங்கேசன்துறைப் பொலிசில் புகார்செய்யப்பட்டதையடுத்து காங்கேசன்துறைப் பொலிஸ் சப். இன்ஸ்பெக்டர் திரு. ஐயாத்துரை, சார்ஜன்ட் வி. தியாகராஜா ஆகியோர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி தீவிர விசாரணையில் இறங்கியுள்ளது.

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரி குறைபாடுகள்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் குறைபாடுகளை நேரில் ஆராயுமுகமாக யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. வீஜயக்கோனும், யாழ். அபிவிருத்தி சபை தலைவர் திரு. சு. நடராஜாவும் இன்று வைத்தியசாலைக்குவிஜயம் செய்கின்றனர்.

வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினர் வைத்திசாலைக் குறைபாடுகளை இவர்களிடம் சுட்டிக்காட்டுவார்கள். (இ)

# "ஆலயங்களுக்கு அள்ளிக்கொடுப்போர் கல்விநிலையங்களையும் கவனிக்கவேண்டும்"

(மாவிட்டபுரம்)

"எமது கல்வி நிலையங்களின் அபிவிருத்தியில் நாம் கவனம் எடுக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் அரசை எதிர்பார்க்கும் நிலை மாறி எமது மத்தியிலுள்ள பணம் படைத்தவர்கள் கல்வி நிலையங்களுக்கு உதவ வேண்டும்.

இவ்வாறு வசாவிளான் மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து பேசிய கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. ஆ. இராமசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது அரசாங்கம் கல்விக்காக ஒதுக்கும் நிதி எமது கல்வித் தேவைகளுக்கு போதுமானது அல்ல. எதற்கும் அரச உதவியையே எதிர்பார்க்கும் நாம் எல்லாவற்றையும் அரசே செய்யும் என்று நினைப்பது தவறாகும். எமது மாணவர்கள் பயிலும் கல்வி நிலையங்களை நாம்வளர்த்தெடுக்கவேண்டும். ஆலயங்களுக்கு அள்ளிக்கொடுக்கும் பணம் படைத்தவர்கள் கல்வி நிலையங்களுக்கும் உதவவேண்டும்.

"நமது மத்தியில் பாடசாலைகளில் பல தேவைகள் இருக்கின்றன. கட்டட வசதியின்மை தளபாடவசதியின்மை என்று பல தேவைகள் இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்து எமது மாணவ செல்வங்களது கல்வி விருத்திக்கு உதவுவது நமது கடமை" என்றார்.

யாழ். பிரதி. திட்டமிடல் பணிப்பாளர் திரு சு. சிவதாசன் பேசுகையில்: "கல்விக்கு எல்லையில்லையாதலால் கல்வியை ஒரு அளவில் நிறுத்திக் கொள்ளாது தொடர்ந்தும் கற்கவேண்டும். பட்டதாரி என்றவுடன் எல்லாம் படித்துவிட்டதாக நினைக்கக்கூடாது. அறிவை மேலும் மேலும் வளர்க்க வேண்டும்" என்றார்.

திருமதி சரோஜினி சிவதாசன் பரிசில்களை வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

## யானையிலிருந்து விழுந்த ஐ. தே. கட்சி எம். பி.!

[கொழும்பு]

யானைஒன்றின்மேலேயிருந்து ஊர்வலமாகச் சென்ற ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினரான திரு. ஜோன் அமரதுங்க அந்த யானையிலிருந்தும் கீழே விழுந்தார்!

வத்தளைத் தொகுதி உறுப்பினரான திரு. அமரதுங்கா, தெலங்கபத என்ற இடத்தில் ஐ. தே. க. ஆதரவாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பொதுக்கூட்டமொன்றுக்கு யானை மீது அமரச்செய்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டபோதே அவர் யானையிலிருந்தும் கீழே வீழ்ந்தார்.

யானையிலிருந்து வீழ்ந்த திரு ஜோன் அமரதுங்காவிற்கு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

# "சமூக விடுதலைக்கு உழைத்த பாலஜோதி"

## அஞ்சலிக் கூட்டத்தில் 'நவம்'

(பச்சிலைப்பள்ளி)

"ஆத்ம சக்தியினால் பெறக்கூடியவற்றைவேறு எந்தச் சக்தியினாலும் பெற்றுக்கொள்ளமுடியாது. நவீன ஆயுதப் பயிற்சிகொடுக்க 6 மாதங்கள் போதும். ஆனால் ஆத்ம சக்தியைப் பயன்படுத்த பல காலங்கள் தேவை. அத்துடன் பல முதியோர்களின் அறிவுரைகளும் வேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கடந்த வருடம் ஜூன் மாதம் நல்லூர் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் வைத்துத் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானவரும், அறவழிப் போராட்டக்குழுவின் கோப்பாய்த் தொகுதி அமைப்பாளருமான வேலுப்பிள்ளை பாலஜோதியின் நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

இந்நினைவுதினக் கூட்டம் அறவழிப் போராட்டக்குழுவின் ஆதரவில் சாவகச்சேரியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. வி. எஸ். துரைராஜா தலைமை வகித்தார். சாவகச்சேரி எம். பி. திரு. வி.என். நவரத்தினம் மேலும் கூறியதாவது:

"எம் மத்தியில் வீரம், தைரியம், இனப்பற்று நிறைய உண்டு. இவ்வீரம், தைரியம், இனப்பற்றினை ஒரு சிலர் தாம் வாழ்கின்ற சூழலிலிருந்துபெற்றுக்கொள்கிறார்கள். இன்னும் சிலர் பயிற்சியினாலும் மற்றும் சிலர் பிறப்பினாலும் பெற்றுக்கொள்கிறார்கள். பாலஜோதியின்குடும்பத்தினை நான் நன்கு அறிந்தவன்.

1956-ம்ஆண்டு தேர்தல் காலத்தில் வரணியில் ஒரு சிறு கடையை நடத்திக்கொண்டு, தான் கடைப்பிடித்த இலட்சியத்திற்காக எத்தனையோ எதிர்ப்புக்களையும், கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டிருந்தார். இத்துணிவு மிக்க குடும்பத்தில் பிறந்து தனது வீரத்தாயின் பாலைக்குடித்து வளர்ந்தவர் இளைஞர் பாலஜோதி" என்றார்.

எங்கள் எதிரி எல்லைக்கு வெளியே இல்லை. எமக்குள்ளே இருக்கிறார்கள். அவர்கள் தங்களைத் தெரியாமலே, இன விடுதலைக்குத் தடையாக இருக்கிறார்கள். என்பதை எடுத்துக்காட்டி, சமூகவிடுதலைக்காகா பாலஜோதி உழைத்தார். சமுதாயக் குறைகளுக்கு எதிராக எம் சக்திக்கு ஏற்ற வகையில் உழைப்பதே நாம் அவர்களுக்குச் செய்யும் அஞ்சலியாகும்" என்றார்.

அறவழிப் போராட்டக்குழு இறந்த பாலஜோதியின் சகோதரியான செல்வி வேலுப்பிள்ளை சிவயோகத்தின் பெயருக்கு சேமிப்பு வங்கியில் நாலாயிரம் ரூபாவை நிரந்திர வைப்புக் கணக்கில் இட்டபற்றுச் சீட்டினை சாவகச்சேரி எம். பி. திரு.வி.என். நவரத்தினம் செல்வி வேலுப்பிள்ளை சிவயோகத்திடம் கையளித்தார். அறவழிப்போராட்டக்குழு ஏற்கனவே ஆயிரம்ரூபாவினைப் பணமாக பாலஜோதியின் குடும்பத்திற்கு வழங்கியுள்ளது.

நினைவுதினக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. எஸ். இராசேந்திரம், சாவகச்சேரி நகரபிதா திரு,எஸ்.கே. மயில்வாகனம், திரு, வி. ஜி. தங்கவேலு ஆகியோரும் உரையாற்றினார்கள். திரு. இரா.முருகானந்தன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## சந்தேக நபர் பொலிஸ் பாதுகாப்பில்

(மாவிட்டபுரம்)

திருடப்பட்ட மாட்டை வெட்டிக் கொண்டிருந்த இருவர் காங்கேசன்துறைப்பொலிசாரினால் கைது செய்யப்பட்டதுடன் அந்த மாட்டின் இறைச்சியும் கைப்பற்றப்பட்டது.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த எஸ். சிவரத்தினம் என்பவர் தமது இரு மாடுகள் திருட்டுப் போய்விட்டதாகத் தெரிவித்ததையடுத்து காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு வி. தியாகராஜா, கான்ஸ்டபிள் ஜஸ்மின் ஆகியோர் விசாரணை செய்தபோது இறைச்சிக் கடைக்காக அச்சுவேலி வல்லையில் வைத்து இத்திருட்டு மாடு வெட்டப்படுவதாகதகவல் கிடைத்தது. அங்கு விரைந்த பொலிசார் மாட்டை வெட்டிய முகமது மொஹிதீன், முகமது பைசர் ஆகிய இருவரையும் கைது செய்ததுடன் வெட்டப்பட்ட மாட்டின் இறைச்சியையும் கை பற்றி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுவந்தனர்.

இந்த மாடுகள் களவாடப்பட்டது பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவிலேயே எனறு தெரியவந்ததால் சந்தேகநபர்களும், கைப்பற்றப்பட்ட இறைச்சியும் பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## ஹன்டி ஞாபகார்த்த புலமைப்பரிசு

### யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கு புலமைப் பரிசு வழங்க ஹண்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த குழு முடிவு செய்துள்ளது.

ஹண்டி ஞாபகார்த்த நூல் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் இதற்கெனக் கிடைத்த பணத்தைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள்பலரும் தாராளமாக நன்கொடை வழங்குவும் என்றும் இக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிதிக் குழுவின் தலைவராக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேற்படி புலமைப் பரிசுசம்பந்தமாக நன்கொடையைப் பெறுவதற்கு உப-வேந்தருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (கு)

## காட்டு யானையிடம் சிக்கிய ஏழு பேர்!

### ஒருவர் கோரமாகப் பலி!

(மன்னார்)

மன்னார் மாதாகிராமத்தில் யானையின் அட்டகாசத்தால் 43 வயதுடைய நபர் ஒருவர் கொல்லப்பட்டார். மாதா கிராமத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற இச்சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது;-

அதிகாலை 7 மணிக்கு 7 பேர் மாதா கிராமம் வழியாக வேலைக்குச்சென்றுகொண்டிருக்கையில் காட்டிலிருந்து யானை ஒன்று வீதிக்குவந்தது. யானையைக் கண்ட 7 பேரும் வந்த வழியே திரும்பினர். அச்சமயம் யானை மீண்டும் காட்டிற்குள் சென்றது. யானை காட்டிற்குள் சென்றுவிட்டது என எண்ணிய 7 பேரும் மீண்டும் அவ்வீதிவழியேசென்றனர் அவர்கள் சென்று கொண்டிருக்கையில் காட்டிலிருந்து வீதிக்குத் திடீரென வந்த யானை 7 பேரையும் துரத்தியது. இதில் 6 பேர் தப்பிவிட்டனர். ஒருவர் மட்டும் யானையிடம் அகப்பட்டார்.

யானையிடம் அகப்பட்டவரை யானை நிலத்தில் போட்டு காலால் அமிழ்த்தியது. அப்போது அந்நபர் சேற்றில் அமிழ்ந்து மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.




# "கிளிநொச்சித் தொகுதி அபிவிருத்தியில் பாரபட்சமின்றி சேவையாற்றுகின்றேன்"

## ஆனந்தசங்கரி கூறுகிறார்

(கிளிநொச்சி)

"கிளிநொச்சித் தொகுதியின் அபிவிருத்தியில் நான் கிராம வேறுபாடுகள் பாராமல் பாரபட்சமின்றிச் சேவையாற்றி வருகிறேன். எனது தொகுதியில் உள்ள சகல கிராமங்களையும் ஒரே கண்ணோட்டத்துடனே நோக்குகிறேன்."

மேற்கண்டவாறு வேரவில் உப தபால்நிலையத்திற்குத் தொலைபேசி வசதியை ஏற்படுத்தி, தொலைபேசிச் சேவையை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையில் கிளிநொச்சி எம். பி. திரு வி. ஆனந்தசங்கரி கூறினார்.

திரு. எஸ். சிவசாமி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு ஆனந்தசங்கரி எம். பி. தொடர்ந்து பேசுகையில், "வேரவில் பகுதி மக்கள் தொலைபேசி வசதியின்றி மிகுந்த கஷ்டத்தை அனுபவித்துவந்ததை உணர்ந்தே இங்கு தொலைபேசிச் சேவை ஏற்படுத்த முன்வந்தேன். எனக்கு ஒவ்வொரு பகுதி மக்களின் தேவைகள் எவையென்று நன்கு தெரியும். மக்களின் தேவைகளை உணர்ந்தே நான் சேவையாற்றிவருகிறேன்" என்றார்.

யாழ்ப்பாணத் தபாற்பகுதி அத்தியட்சகர் திரு. ஏ. சி. கந்தசாமி, திரு. இ. கிருஷ்ணராசா, திரு பி. தர்மலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## "இலங்கைக்கு தொழில்நுட்பக் கல்வியே அவசியம் தேவை!"

[கரவெட்டி]

"மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பெற்றோரும் தமது மனப்பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம் தமது பிள்ளைகளின் ஆற்றல், தகுதி, உளப்பாங்கு ஆயவற்றைக் கருத்திற் கொள்ளாது தங்கள் பிள்ளைகள் குறிப்பிட்ட ஒரு நெறியைத் தான் பயில வேண்டும் எனக் கட்டாயப்படுத்தக் கூடாது"

இவ்வாறு கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஆ. வ. தங்கராசா கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாட்டிற்கு தொழில் நுட்பக் கல்வியே மிக அவசியம் என்பதையும் பெற்றோர் உணர வேண்டும். இக்கல்லூரியின் பழைய மாணவர்களில் 90 வீதமானோர் இன்று மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் நுட்பத்துறையில் சேர்ந்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர்கள்.

இன்று பல்கலைக் கழகங்களில் பரீட்சையில் தவறும் மாணவர்கள் குறிப்பிட்ட பாடங்களில் தகுதி இன்மையால் சித்தியடையத் தவறுகிறார்கள் என நினைத்துவிடக் கூடாது அப்பாடங்களில் அவர்கள் தங்களுக்குள்ள அறிவை ஆங்கில மொழி மூலம் வெளியிட முடியாமையே அதற்குக் காரணமாகும்" என்றார்.

கல்லூரி அதிபர் திரு எஸ். செல்வரட்ணம் வருடாந்த பரிசுநாள் அறிக்கையை சமர்ப்பித்துப் பேசினார்.

## பரி.யோவான் பரிசளிப்பு விழா

[அரியாலை]

யாழ். பரி.யோவான் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இம் மாதம் 4-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் கல்லூரியின் பீற்றரு ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்லூரியின் முகாமையாளரும் யாழ்ப்பாண ஆர்ச்பீக்கனுமான அருட்திரு சாம் டி. ஹேர் சிங்டன் அடிகளார் தலைமையில் நடை பெறும் இவ்விழாவில் பிரதம அதிதிகளாக வைத்தியகலாநிதி வேதநாயகமும் அவரது பாரியாரும் கலந்து கொள்ளுகிறார்கள்.

கல்லூரியின் வருடாந்த அறிக்கையைக் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜன் சமர்ப்பித்துப் பேசுவார். பரிசளிப்பு விழா உரையை வைத்திய கலாநிதி தேவநாயகம் வழங்குவார். பரிசில்களை திருமதி தேவநாயகம் வழங்குவார். (அ)

## தெ.ப.உ.வி. கூட்டுறவுச் சங்க பத்தாவது ஆண்டு விழா

(கரவெட்டி)

யாழ். மாவட்டத்தில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்ட பத்தாவது ஆண்டு விழாவினை இச் சங்கங்களின் சமாசம் எதிர் வரும் 20-ம் திகதி யாழ். திறந்த வெளியரங்கில் விமரிசையாகக் கொண்டாவுள்ளது

இவ்விழாவினை யொட்டி பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஆண்களுக்கான 100 மைல் சைக்கிள் ஓட்டம் பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டம் ஆண்கள் 5 மைல் மரதன் ஓட்டம் மற்றும் சிறுகதை, கவிதை, கட்டுரை பேச்சு நாடகப் போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன. மெய் வன்மைப் போட்டிகள் 19-ம் திகதியும் ஏனைய போட்டிகள் அதற்கு முன்னரும் நடாத்தப்படும்.

20-ம் திகதியன்று ஒவ்வொரு தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்தும் விழா நடைபெறும் இடத்திற்கு அலங்கார சைக்கிள் பவனி நடாத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அன்றைய தினம் சங்கங்களின் பத்தாண்டு காலப் பணியை விளக்கும் வகையில் அமைந்த 'கற்பகம்' சிறப்பு மலரினை எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் வெளியிட்டு வைப்பார் விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## லண்டன் ..

[3ம் பக்கத் தொடர்ச்சி]

வாகனம் தயார் செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனத்தை மே. ஜெர்மனியைச் சேர்ந்தமோட்டார் வாகன உற்பத்தி நிறுவனமொன்றேதயாரித்ததென்பது குறிப்பிடத்தக்கது. (இ)


# பிரித்தானிய கொடிபோல அந்தநாட்டிற்கே முற்றிலும் உரித்தானது பிளன்டெல் பேர்மோகிளேஸ் பெயின்ட்.




மிகமிக நம்பகமானது. எல்லாக் கால நிலைமைகளையும் தாக்குப்பிடிக்கிறது. உறுதியானது. சகலவித பாவனைக்கும் அலாதியானது.

பிளன்டெல் பேர்மோகிளேஸ் பெயின்ட்களை கூடுதலான இடப்பரப்பிற்குப் பயன்படுத்தலாம் இவை துரிதமாக உலர்பவை; அத்துடன் உங்கள் நேரத்தையும் சிரமத்தையும் பெருமளவு குறைக்கின்றன.

மேலும், இவை அதிக பளபளப்பானவை, பிரகாசமானவை, நீடித்துழைப்பவை.

பிரித்தானிய கைத்தொழிலில் நன்மதிப்புப் பெற்ற ஒரு பெயர் - பிளன்டெல் பேர்மோகிளேஸ்.

பிளன்டெல் பேர்மோகிளேஸ்
கட்டிடக்கலைஞரின் உறுதுணை

இமல்ஸன் (1 லிற்றா) ரூபா 46/-
இனமல் (500 மி.லிற்றர்) ரூபா 29/-

டெல்மேஜ் போசைத் அன்ட் கம்பெனி (பெயின்டஸ்) லிமிட்டெட்,
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10,
தொலைபேசி: 93367, 93361-5

**வெஸ்லி** 3-6-82வரை மானிப்பாய்
தினசரி 6-15, 9-15
விசேட மெட்னி காட்சி
தினசரி 2-30
கமல் — ஸ்ரீபிரியா
**நீயா?** இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி [கலர்]

**ஹரன்** யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
Clint Eastwood
EVERY WHICH WAY BUT LOOSE

**றீகல்** (யாழ்நகர்) 31st — 1st தினசரி 5 காட்சிகள்
**White Line Fever** (Color)
11-6-82 முதல் ஸ்ரீதரின்:
மோகனப் புன்னகை

**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
நாகேஷ், முத்துராமன், விஜயா
**சர்வர் சுந்தரம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு**

**லிடோ** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
**பெற்றால்தான் பிள்ளையா**
(புத்தம்புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள் கடைசி 3 தினங்கள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
**பொல்லாதவன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 5 காட்சிகள்
All that work; All that glitter;
All that pain; All that love; All that crazy;
Rhythm
All that Jazz
Roy Scheider, Jessica Lange, Ben Vereen
**ALL THAT JAZZ**
Directed by Bob Fosse—For Adults Only
No one under 18 yrs. admitted.

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும் 3-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
★ கார்த்திக் ★ ராதா
தியாகராஜன் நடித்த
**அலைகள் ஓய்வதில்லை**
(கலர்)

**ராஜா** [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
தொடர்ந்து ''ஹவுஸ்புல்'' காட்சிகளாக
★ ரஜனிகாந் ★ சுஜாதா ★ விஜயன்
★ கராத்தே மணி ★ ரதி
**அன்புக்கு நான் அடிமை**
[ஈஸ்மன் கலர்]

**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
2-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா, சுவப்னா, தேங்காய், தங்கவேலு, நாகேஷ்.
இப்பொழுது பரபரப்பூட்டிக் காட்சியளிக்கிறது.
**கடல் மீன்கள்**
விறுவிறுப்பு மிகு வண்ணச் சித்திர ஓவியம்


“ஈழவிடுதலைக்கு உதவுமாறு

# இந்திராகாந்தியை தூண்டும் நிலைக்கு தமிழ்நாடு பக்குவமடைந்துள்ளது”

## பாரதி விழாவில் அரு. கோபாலன்

(யாழ்ப்பாணம்)

பங்களாதேஷ் பிரிவதற்கு இந்திய அரசின் கீழிருந்த மேற்கு வங்காளம் திருமதி இந்திரா காந்தியைத் தூண்டியது. அதேபோன்று ஈழ விடுதலைக்கு திருமதி இந்திரா காந்தி உதவவேண்டுமென்று அவரைத் தூண்டுமளவிற்கு எங்கள் தமிழ் நாடு பக்குவமடைந்துள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பாரதி நூற்றாண்டு விழாவில் பேசிய தமிழ்த் தோழமைக் கழகப் பொதுச்செயலாளர் தமிழ்த் திரு. அரு. கோபாலன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கோவை மகேசன் தலைமையில் நடந்த கூட்டத்தில் அரு. கோபாலன் மேலும் கூறியதாவது;-

தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்ந்தாலும் இன ஒற்றுமை ஏற்படவேண்டும். எந்தவித பாதிப்பு ஏற்பட்டாலும் எங்களுக்குள் பிளவு ஏற்படவே கூடாது. இன எழுச்சி ஏற்பட வேண்டுமென்றே மூன்று புலவர்களை பாரதி தேர்ந்தெடுத்தான்.' ஈழத் தமிழர் நிலை குறித்து தமிழக மக்கள் முன்பு வைத்திருந்த அபிப்பிராயம் வேறுவிதமாக இருந்தது.

கொழுந்து பறிப்பதற்கு இலங்கைக்கு வந்த சில கூலிகளின் சந்ததியினர்மாத்திரமே ஈழத்திலிருக்கிறார்கள் என்று முன்னர் தமிழகம் கருதிவந்தது. ஆனால் ஈழத் தமிழர்களின் வரலாறு இப்பொழுது தமிழகத்தில் நன்குணரப்பட்டுள்ளது.

கடைசியாக ஈழத்தில் நடைபெற்ற வன்செயலை அடுத்து தமிழக மக்களெல்லாம் அரசியல் வேறுபாடின்றி நாடளாவிய ஹர்த்தாலை நடாத்தினோம் தமிழக அரசாங்கக் கட்சிகளும் எதிர்க்கட்சிகளும் ஒன்றுபட்ட நிலையில் ஹர்த்தாலை நடாத்தியதென்றால் தமிழக வரலாற்றில் ஈழத் தமிழர்களின் பிரச்னையை முன்வைத்தே ஆகும்.

தமிழக சட்டசபையிலும் ஈழத் தமிழர் பிரச்னையில் இந்திரா காந்தி தலையிட வேண்டுமென்று கோரித் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தோம்.

ஈழத்தமிழர் பிரச்னைக்கு உலகளாவிய நிலையில் ஆதரவு கிடைத்துவருகிறது. இதில் எதுவித சந்தேகமும் கொள்ளத்தேவையில்லை.' (மா)

## வருடாந்தக் கலைவிழா

[அரியாலை]

நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த கலைவிழா ஜூன் 14ம் திகதி வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற விருக்கிறது,

மாணவ-மாணவிகள் கலை கலாசார நடன, நாடகநிகழ்ச்சிகளுடன் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதிகளாக வட பிரதேச கல்விப்பணிப்பாளர்திரு. கே. சிவநாதனும், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைச் செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமா திரு. தேவநேசன் நேசையாவும் கலந்து கொள்ள விருக்கிறார்கள்.

[அ]

## திருக்குறள் மாநாடு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மறைக் கழகத்தினால் நடாத்தப்படவிருந்த 12 வது திருக்குறள் மகாநாடு ஜூன் மாதம் 26ம், 27ம், 28ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் இம்மகாநாடு ஜூன் 5, 6, 7ம் திகதிகளில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. தவிர்க்க முடியாத சில காரணங்களால் இம்மகாநாடுஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக மகாநாட்டுக் குழு இணைப்புச் செயலாளர் திரு ஐ. இரத்தினம் அறிவித்துள்ளார். (மா)

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 17ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(1—6—82)

மேடம்: அதிகாரக் குறைவுக்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் வேண்டும். அவசர நடவடிக்கையைத் தவிர்த்துக்கொள்ளவும்.

இடபம்; வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள் பொதுவாக மனநிறைவுக்கும் இடமுண்டு குதூகலமான சம்பவம் இடம்பெறும்.

மிதுனம்: புதிய எண்ணங்கள் மலரும் தொழில்துறையில் முன்னேற்றமுண்டு. பொதுமக்களுடன் தொடர்பு பொதுசன தலைமையும் கிடைக்கும் இருப்பிட மாற்றத்திற்கும் இடமுண்டு.

கடகம்: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அதுமேலும் குட்டிபோடும். பணவிவகாரங்கள் மகிழ்ச்சியை அளிக்கும். தடைபட்ட பொருள் வந்து சேரும். நல்லதினம்.

சிங்கம்: ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். தொழில்புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிக்கும் இடமுண்டு. பொறுமை விரும்பத்தக்கது. சுமாரானதினம்.

கன்னி; இனம் தெரியாத ஒருவரின் கவலையால் சோர்வடைவீர்கள். வாய்ப்புப் பதார்த்தங்களை தவிர்த்துக் கொள்ளவும். சகோதரவழியாலும் கவலை தோன்றக்கூடும் துக்கதினம்.

துலாம்: சொற்சிலம்பம் ஆடுவதன் மூலம் மற்றவர்களை சொக்கவைப்பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பெரியவர்களுடன் உறவுகள் பலப்படும்.

விருச்சிகம்: திகைக்க வைக்கும் சம்பவம் இன்று நடைபெறும் திருப்பமுடியும். கோஷ்டிச் சண்டையில் மாட்டிக் கொள்ளாதிருக்கவும். அரசினர் ஆத்திரப்பார்வையும் உங்கள் பக்கம் திருப்பும்.

தனு: தன்மான வாழ்வுடன் தனமுடமை சேரும். தாயின் ஆதரவும் தகுந்து கிடைக்கும். முயற்சி செய் முன்னேற்றம் உண்டு. வாழ்த்தும் உங்கள் பக்கம்.

மகரம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறைநம்பிக்கையுடன் இல்லத்திலும் அமைதி தவழும். இரக்க சிந்தை நன்று நல்லதினம்.

கும்பம்: இடர்கள் பல தாக்கும். இதயத்தில் எரிமலை குமுறும் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும். சூழ்ச்சியின் உச்சக்கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும்.

மீனம்: கற்கண்டுபோல் இனிக்கும் வாழ்க்கை. காதல் விவகாரங்களுக்கும்இடமுண்டு களஸ்தரவழியின்மூலம் கனதனம் சேரக்கூடும். தித்திக்கும் செய்தியுடன் தனவாழ்வும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

### மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில்

ஈடு / 3344

மேற்படி இலக்க வழக்கில் வாதிகளாகிய தெல்லிப்பழை கொல்லங்கலட்டி ஆறுமுகம் கந்தப்பிள்ளைக்கும், இராசா சுந்தரராசாவுக்கும் போகவேண்டிய தீர்வைத் தொகை 18095/- மேலும் இதில் ரூ. 15000/-க்கு 8-11-1979 தொடக்கம் 26-9-1980 வரைக்கும் வருடமொன்றுக்கு 15 வீத வட்டியும் அதன் பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூ. 535/70 சதம் விற்பனவுச் சலார்களும் இதில் கொடுக்கப்பட்ட ரூ. 2773/64 சதம் கழித்து மிகுதித் தொகையை பிரதிவாதிகளாகிய தெல்லிப்பழை கொல்லங்கலட்டி ‘ஆனந்தா ஸ்ரோர்ஸ்’ கதிர்காமர் சின்னத்துரையிடமும் பெண் சிவக்கொழுந்துவிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்விபரிக்கப்படும் ஆதனம், 23-6-1982 புதன் கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை மேற்கிறை இராக்கலட்டி நி. பர. 10 குளி 14 இதிற் தெற்குப்பக்கமாக நி. பர. 4 கடைக்கட்டிடங்களும் இந்தப் பரப்பு நாலுக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு எங்களுக்குரிய இதன் மிகுதி ஆதனம், மேற்கு றோட்டு, தெற்கு ஒழுங்கை இதடங்கலும்.

வ. சி. மகாதேவன்,
553, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
3403

பயங்கர ஆயுதங்களுடன் சிக்கியவர்கள்:

# எட்டு இளைஞர்களுக்கும் 14-ம் திகதிவரை றிமாண்ட்

[புலோலி]

வடபகுதியில் துப்பாக்கி முனையில்கொள்ளைகளை நடத்தி பருத்தித்துறை பொலிசாரிடம் பயங்கர ஆயுதங்களுடன் சிக்கிக்கொண்ட எட்டு இளைஞர்கள் அடங்கியகொள்ளைக் கோஷ்டியினரை பருத்தித்துறை நீதவான் இம்மாதம் 4-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இதுதொடர்பாக சுழிபுரத்தைச்சேர்ந்த வி. சந்திரசேகரம், எழுதுவட்டுவாள் எஸ். ஜெயபாலன், வல்வெட்டியைச் சேர்ந்த எஸ். சிவலிங்கம், பட்டுவிலைச்சேர்ந்த எஸ். சபலநாதன், எஸ். நாகரராசா, கே. குகதாஸ், உடுப்பிட்டியைச் சேர்ந்த, எஸ் சிறீகாந்தன், கார்ச்சாரதியான சுழிபுரத்தைச்சேர்ந்த வி. கணேசலிங்கம் ஆகியோரை பருத்தித்துறை பொலிசார் நீதவான் திரு. கே.எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்து, இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும், அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் கோரினர்.

பருத்தித்துறை நீதவான் சந்தேக நபர்களை இம்மாதம் 14-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், அவர்களை அடையாள அணிவகுப்புக்குட்படுத்தவும் அனுமதியளித்தார்.

இச்சந்தேகநபர்கள் வடபகுதியில் நடத்திய பதினொரு துப்பாக்கிமுனை கொள்ளைகளில் ஐந்து கொள்ளைகள் பருத்தித்துறை பொலிஸ் பகுதியில் இடம்பெற்றுள்ளன

ஏனைய கொள்ளைகள் காங்கேசன்துறை, சுன்னாகம், வல்வெட்டித்துறை பொலிஸ் பகுதிகளில் நிகழ்ந்துள்ளன.

இக்கொள்ளைகளுக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் 'ஏ 40' கார் பருத்தித்துறைப் பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. [வெ[

# இப்பவும் நடக்கிறது

## தீ!

அந்த நாள்
நினைவுகள்
நெஞ்சிலே
வந்ததே .....

'ஊநரை'.

# பேராதனை கலைப்

## பட்டதாரிகள்

[யாழ்ப்பாணம்]

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டதாரிகளாகச் சித்தியடைந்தோர்களின் பட்டியலை வெளிவாரிப் பீடம் வெளியிட்டுள்ளது.

கீழ்க்காணுவோர் பட்டதாரிகளாகின்றனர். ஏ. அருளானந்தன், எஸ். ஸ்ரீதயாளன், ரி. க்ணேசபிள்ளை, பாலகிருஷ்ணன், ஞானராஜா, என். கணேசபிள்ளை, ஏ. சர்வானந்தன், பி. முருகேசு, முத்துலிங்கம், புவனேந்திரன், எஸ். சாந்தலிங்கம், கே. செல்லத்துரை, செல்வி கே. சிவானந்த சுந்தரம், ஜீ. சௌந்தரராஜா, வண ஆர் பரஞ்சோதி, செல்வி வை. சோமசுந்தரம்.

1857, 1886, 1915 ஆகிய இலக்கங்களைக்கொண்டவர்களின் பரீட்சை முடிவுகள் அவர்களது முதல் தேர்வு முடிவுகள் கிடைத்தபின்னரே அறிவிக்கப்படும்.

இவர்களின் சித்தி 81 செப்டம்பர் 1-ம் திகதியிலிருந்து கணிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களது பரீட்சை ஆண்டு 1979 ஆகும். [க]

## இன்று உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். பொதுசன நூல் நிலையம் எரிக்கப்பட்ட ஓராண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக இன்று காலை 7மணி முதல் மாலை 5 மணிவரை யாழ். மாநகரசபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் உண்ணாவிரதம் நடைபெறவிருக்கிறது

யாழ் பொதுசன நூல்நிலைய முன்றலில் நடைபெறவிருக்கும் இந்த உண்ணாவிரதத்தில் யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உட்படப்பலர் கலந்துகொள்வர் பிரார்த்தனையும் நடைபெறும்.

**விடுதலை அணியினர் உண்ணாவிரதம்**

தமிழீழ விடுதலை அணியினரும் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமையில் தந்தை செல்வா நினைவாலயத்தில் இன்று காலை 7 மணி முதல் பி. ப. 4 மணிவரை கண்டன உண்ணாவிரதம் அனுஷ்டிக்கவுள்ளனர். மா.

## நீதிமன்றத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர்கள் உத்தரவிட்டனர்

வைத்திய பரிசோதனையின் போது சட்டத்தரணிகள் உடன் இருக்கலாம் என்றும் நீதியரசர்கள் அனுமதி வழங்கினர்.

ஆட்கொணர்வு மனுமீது அ. விமலராசாவும் ஏனைய இளைஞர்களும் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஓ. எஸ். எம். செனிவரத்ன, ஜே. அபயவர்த்தன முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்

மாணவன் அ. விமலராஜாவுடன், தாமு கந்தையா [புத்தூர்], ரி. பீ. அமிர்தலிங்கம் (தொண்டமானாறு), சிங்காரம் நடராசா (கம்பர்மலை), சரவணப்பெருமாள் யோகராசா (வல்வெட்டி, ஜேம்ஸ் நிக்கலஸ் (குருநகர்), வேலுப்பிள்ளை தர்மலிங்கம் (சாவகச்சேரி) குத்துக்குமாறு சிறீகுமார் (உருப்பராய்) ஆகிய ஏழு இளைஞர்களும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஆட்கொணர்வு மனுமீது அ. விமலராஜா, ச. யோகராஜா, ஜேம்ஸ் நிக்கலஸ் ஆகிய மூவர்மீதும் ஜூலை 26ம் திகதி விசாரணை நடைபெறும் என்றும் நீதியரசர்கள் தெரிவித்தனர். (ம

## சுவீப் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 848 ரூபா 25 சத ஆறுதல் பரிசுபெறும் நூறுடிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 114 | 07 A 867 |
| 07 A 884 | 09 A 100 |
| 10 A 995 | 17 A 485 |
| 26 A 178 | 19 B 196 |
| 24 B 259 | 09 C 899 |
| 11 C 656 | 14 C 174 |
| 15 C 026 | 18 C 537 |
| 23 C 268 | 24 C 509 |
| 18 D 496 | 10 E 801 |
| 01 F 041 | 10 F 572 |
| 14 F 242 | 16 F 940 |
| 18 F 955 | 25 F 622 |
| 10 G 532 | 18 G 995 |
| 05 H 130 | 07 H 662 |
| 14 H 442 | 20 H 478 |
| 22 H 194 | 26 H 318 |
| 04 J 752 | 08 J 364 |
| 24 J 985 | 07 K 697 |
| 07 K 114 | 13 K 709 |
| 18 K 797 | 22 K 180 |
| 11 L 125 | 12 M 209 |
| 17 M 714 | 02 N 030 |
| 06 N 843 | 07 N 404 |
| 13 N 177 | 19 N 138 |
| 10 O 800 | 11 O 577 |
| 12 O 015 | 12 O 534 |
| 02 P 816 | 15 P 068 |
| 11 Q 622 | 12 Q 944 |
| 17 Q 006 | 01 R 832 |
| 04 R 168 | 20 R 502 |
| 21 R 990 | 11 S 258 |
| 12 S 330 | 13 S 720 |
| 19 S 135 | 23 S 202 |
| 25 S 217 | 02 T 126 |
| 03 T 886 | 07 T 822 |
| 08 T 842 | 09 T 943 |
| 20 T 660 | 01 U 868 |
| 04 U 612 | 13 U 676 |
| 22 U 917 | 14 V 131 |
| 17 V 581 | 20 V 410 |
| 06 W 326 | 06 W 852 |
| 11 W 639 | 13 W 729 |
| 20 W 908 | 16 X 851 |
| 17 X 293 | 17 X 558 |
| 19 X 604 | 01 Y 543 |
| 04 Y 553 | 05 Y 275 |
| 11 Y 470 | 15 Y 533 |
| 16 Y 801 | 02 Z 832 |
| 03 Z 310 | 04 Z 711 |
| 15 Z 183 | 26 Z 102 |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.]

## சுதுமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரணை இன்னும் முடியவில்லை என்று நீதவானுக்கு தெரிவித்ததைத் தொடர்ந்து மீண்டும் அவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இம்மரணம் தொடர்பாக சம்பந்தப்பட்ட காரின் மெக்கானிக்கான வீரகத்தி இரத்தினம் என்பவரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானார். (மா)


# வெற்றிடங்கள்

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள பபுளர் (Bubblers), ஹெல்ப்பர் (Helpers', புளோவர் (Blowers) போன்றவர்கள் தேவை.

அனுபவமுள்ள Bottle and Press Mechine இயக்குநரும், ஹெல்ப்பரும் தேவை.

நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.

உடனே நேரில் வரவும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்**

**நீர்வேலி.**

3406


# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் நடராசா

காரைநகர் களபூமி விளானையைச் சேர்ந்தவரும், இராசமலர் களஞ்சியம் உரிமையாளருமான ஆறுமுகம் நடராசா Bsc. காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை ஆறுமுகத்தினதும், திருமதி ஆறுமுகத்தினதும் அன்பு மகனும்; இராசமலரின் அன்புக் கணவரும், ஆ. ச. சங்கரப்பிள்ளை சகோதர நிறுவகப் பங்காளர் ஆ. ச. ஆறுமுகம், திருமதி ஆறுமுகத்தினதும் மருமகனும், இராசலிங்கம் (ஞானமலர் ஸ்டோர், கொழும்பு), பாலேந்திரன் (ஆ. ச. சங்கரப்பிள்ளை சகோதர நிறுவகம், பரந்தன்) ஆகியோரது மைத்துனரும், சி. ச. கனகரத்தினம், சி. ப. ஆறுமுகம், சி. ப. சிதம்பரப்பிள்ளை ஆகியோரது சகோதரரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (1-6-82) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் தில்லை மயானத்தில் நடைபெறும்.

3410

# மரண அறிவித்தல்

## திரு. பி.ப சி. பரமசாமி செட்டியார்

திரு. பி. ப. சி. பரமசாமி செட்டியார் காலமானார். அன்னார் காலஞ்சென்ற ஐயனையம்மாளின் அன்புக் கணவரும், தையல்நாயகி, ஜெகதீஸ்வரி, கதிரேஸ்வரி, சிதம்பரநாதன் (கணேசன் மில்ஸ், காரைதீவு கீ. மா), நகுலராஜா (யாழ். சாந்தி சினிமா), செல்வநாதன் யாழ். ஆர். எஸ். அச்சகம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ஐயம்பெருமாள் செட்டியார், திரு. ஆறுமுகம் செட்டியார், காலஞ்சென்ற திரு. C.S A. நமசிவாயம் செட்டியார், திருமதி இராஜலட்சுமி சிதம்பரநாதன், திருமதி ஜெனகா நகுலராஜா, திருமதி ரங்கநாயகி செல்வநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 1-6-82) செவ்வாய்க்கிழமை பி. ப. 5-30 மணிக்கு யாழ். சி.எஸ் கே. இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக வில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 3409

# மரண அறிவித்தல்

## வசாவிளான் கணபதிப்பிள்ளை நடராஜா

வசாவிளானைச்சேர்ந்தவரும், கொழும்பு அரசாங்க மரக்கூட்டுத்தாபன உதவிக் கணக்காய்வாளருமான திரு. V. K. நடராஜா காலமாகிவிட்டார். இவர் செல்வநாயகி (அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் கொழும்பு அவர்களின் அன்புக் கணவரும்; ஜெயந்தி, சுமதி, உமாசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. க முத்தையா (யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) அவர்களின் சகோதரரும், திருவாளர்கள் மகாராஜா, பரராஜசிங்கம், அருள்பிரகாசம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று மாலை (1-6-82) 5-00 மணிக்கு வசாவிளானில் நடைபெறும். 3407

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில 1982 ஜூன் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81.
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.